# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2141/20 - 2019 සැප්තැම්බර් මස 18 වැනි බදාදා - 2019.09.18

***2141/20 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி I - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், குண்டசாலை ஹாரகம நீர் வழங்கல் செயல்திட்டத்தின் பிச்சமல் வத்த நீர்த்தாங்கியின் உட்பிரவேசிக்கும் பாதை மற்றும் நீர்க் குழாய்களை பொருத்துவதற்கான மாற்றுக் காணித்துண்டுகளின் பயன்பாட்டு உரிமையை கையகப்படுத்தத் தேவைப்படுவதனால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,*
*இல. 35, 'லக்திய மெதுர', புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்த, பத்தரமுல்லை,*
*2019, செத்தெம்பர் 09.*
*5/2/1/1500.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், கண்டிப் பட்டினம் (கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட கோரளே பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 278, குருதெனிய மேற்கு கிராம அலுவலர் பிரிவில், கிரிமெடிய கிராமத்திலமைந்த, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திருமதி ஜே. பி. கே. வீரகோன் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 0394-*BS *ஐக் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தின், காணித்துண்டிலக்கம் 96 மற்றும் 219 இனால் குறிப்பிடப்பட்டுள்ள "செட்டிகே வத்த" எனும் பெயருடைய காணியின் முழு அளவில் 30.1 பேர்ச்சஸ் அளவிலான, கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டுகள் இரண்டு.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk*.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***துண்டிலக்கம் : 96***

***காணியின் விஸ்தீரணம் : 19.8 பேர்ச்சஸ்***

***காணியின் எல்லைகள் :***

*வடக்கு : இல. 0394-BS உடைய வரைபடத்தின் காணித்துண்டு இல. 224, 225, 226, 227, 92 மற்றும் 219 ;*

*கிழக்கு : அம்பிடிய இலிருந்து குருதெனிய வரையிலான பாதை (பிரதேச சபை) மற்றும் இல. 0394-BS உடைய வரைபடத்தின் காணித்துண்டு இல. 220 மற்றும் 227 ;*

*தெற்கு : அம்பிடிய இலிருந்து குருதெனிய வரையிலான பாதை (பிரதேச சபை) மற்றும் இல. 0158-BS உடைய அதிகாரம் பெற்ற நில அளவையாளர் வரைபடத்தின் காணித்துண்டு இல. 97 மற்றும் அந்த வரைபடத்தின் காணித்துண்டு இல. 95 ;*

*மேற்கு : இல. 0158-BS உடைய அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் வரைபடத்தின் காணித்துண்டு இல. 92, 93, 94 மற்றும் 95.*

***துண்டிலக்கம் : 219***

***காணியின் விஸ்தீரணம் : 10.3 பேர்ச்சஸ்***

***காணியின் எல்லைகள் :***

*வடக்கு : இல. 0394-BS உடைய வரைபடத்தின் காணித்துண்டு இல. 214, 218, 216 மற்றும் 217 ;*

*கிழக்கு : இல. 0394-BS உடைய வரைபடத்தின் காணித்துண்டு இல. 215, 217 மற்றும் 222 ;*

*தெற்கு : இல. 0394-BS உடைய வரைபடத்தின் காணித்துண்டு இல. 96, 220 மற்றும் 221 ;*

*மேற்கு : இல. 0394-BS உடைய வரைபடத்தின் காணித்துண்டு இல. 214 மற்றும் காணித்துண்டு இல. 218.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

*திரு. டபிள்யூ. ஏ. ரன்ஜித் உபேந்தர சில்வா,*
*இல. 160/5, குமுது மாவத்தை,*
*ஸ்ரீசோமரத்ன மாவத்தை,*
*பெல்லன்வில,*
*பொரலஸ்கமுவ.*

*10 - 70*

---

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், கண்டி வடக்கு - பாததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ், கிராகடுவ நீர் பம்பிக்கும் நிலையத்தின் உட்பிரவேசிக்கும் பாதை மற்றும் குழாய்களை பொருத்துவதற்கான மேலதிக காணித்துண்டு ஒன்று தேவைப்படுவதனால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் பயன்பாட்டு உரிமையை பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,*
*இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்த, பத்தரமுல்லை.*
*2019, செத்தெம்பர் 09.*
*5/2/1/1502.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பர பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 631, கிராகடுவ கிராம அலுவலர் பிரிவில், கிராகடுவ கிராமத்திலமைந்த, "ஹபுகஸ்பிடிய வத்த" (தோட்டம்) எனும் பெயருடைய காணியில், கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 07 பேர்ச்சஸ் அளவிலான காணித்துண்டு ஒன்று.*

**துண்டிலக்கம் : ஹபுகஸ்பிடிய வத்த (தோட்டம்)**

**காணியின் விஸ்தீரணம் : 7 பேர்ச்சஸ்**

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி;

கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி;

தெற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி, வயல்;

மேற்கு : குடுகல - வத்தேகம பாதை.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

திரு. என். எச். எம். டபிள்யூ. ஏ. டீ. பி. ஏக்கநாயக்க,
ஹபுகஸ்பிடிய, கிராகடுவ, ஜம்புகஹபிடிய.

*10 - 71*

---

திருத்தம்

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.02.28 ஆந் திகதிய 2112/39 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையின் 2 A ஆம் பக்கத்தில் இலக்கம் 03 - 771 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின், அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் கையகப்படுத்தும் காணியின் பகுதியாக "இலக்கம் 4490 A இன் காணியின் வரைபட இலக்கம் 1" என குறிப்பிடப்பட்டிருப்பினும், அது "காணி இலக்கம் 1 இன் பகுதியாக" திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 09.
5/2/1/1429.

*10 - 72*